மக்கள் வங்கி

நிதி துறைக்கு பயனுறுதிமிக்க ஒரு பிரவேசம்

நிதி துறையில் செயலூக்கமுள்ள முதன்மை அரச வாணிப வங்கியான மக்கள் வங்கி தனது ஸ்திரத்தன்மையை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சியை நிறைவேற்றிக் கொள்ளுவதில் எம்முடன் முன்செல்லுவதற்கு அர்ப்பணிக்கக்கூடிய, பொறுப்பு வகிக்கக்கூடிய, நாளைய தினத்திற்கு அவசியமான தலைமைத்துவத்திற்குத் தோள் கொடுக்கக்கூடிய ஊக்கமுள்ள இளைஞர் யுவதிகள் எமக்குத் தேவைப்படுகிறார்கள். இந்தப் பணிகளை உங்கள் வசமிருந்தால் எம்முடன் சேர்வதற்கு இதோ பெறுமதியானதொரு சந்தர்ப்பம்.

வாடிக்கையாளர் சேவை உதவியாளர்

தேவையான தகைமைகள்

- விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 06 பாடங்களில் 05 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். 05 திறமைச் சித்திகளுக்கிடையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

மற்றும்

- க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் சாதாரண சித்தி (பொது ஆங்கில பாடத்தைத் தவிர்த்து) பெற்றிருக்க வேண்டும்.

வயது

- அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 23 வயதுக்கு மேற்பட்டமாலும் இருக்க வேண்டும். (அதற்கமைய பயதெல்லை தொடர்பான தகைமை பெறுவது, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 2003.06.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1998.06.02 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னராயின் மாத்திரமாகும்.)

நிபந்தனைகளும் நியதிகளும்

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு சம்மதிக்க வேண்டும். அத்துடன் அவர்கள் முதன்முதலில் இடைச் சேர்க்கப்படுகின்ற சேவை நிலையத்தில்/பிராந்தியத்தில் குறைந்தபட்சம் 05 வருட காலத்திற்குத் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டியது கட்டாயமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் 04 வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் அனைத்து வங்கி நடவடிக்கைகளை உள்ளடக்கும் வகையில் முறையான மற்றும் முழுமையான பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.
- பயிற்சிக் காலத்தில் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆட்சேர்ப்புக்கு ஏற்புடையதான நிபந்தனைகளும் நியதிகளும்

இந்த ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை இணையவழியில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவத்தை இணையவழியில் சமர்ப்பித்தன் பின்னர் அதை பதிவிற்கம் செய்து அதன் அச்சுப் பிரதியில் (Printed Copy) விண்ணப்பதாரர் கையொப்பத்தை சான்றுப்படுத்தி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் **பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிதியமைச் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலக்கம் பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு** என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்குத் தகைமை பெறும் பரீட்சை, மக்கள் வங்கி - 2021"** எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.06.02 ஆகும்.

குறிப்பு

விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டியது கட்டாயமாகும். அத்துடன் அது தபாலில் காணாமல் போய்விட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற முறைப்பாடுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நடடங்களை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற திறன்கள் பதிவேட்டின் வரிசைக்கிரமப்படி வெளியிடப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும். எவ்வாறாயினும் நிர்ப்பந்த வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை, நியமனம் செயற்படுத்தப்படுகின்ற திகதி என்பவை மக்கள் வங்கியின் தற்றுணிபின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

எழுத்துமூல பரீட்சை

இப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும். குறிப்பிட்ட பரீட்சை 2021 ஆகஸ்ட் மாதமளவில் நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

பாட இலக்கம்	பாடம்	மொழிமூலம்	காலம்	ஆகக்கூடிய புள்ளிகள்	சித்தியடையும் புள்ளிகள்
01	பொது உளச்சார்பு	சிங்களம் தமிழ் ஆங்கிலம்	1 மணித்தியாலம்	100	40
02	கிரகித்தல் திறன்	சிங்களம் தமிழ் ஆங்கிலம்	1 மணித்தியாலம்	100	40
03	எண் சார்ந்த திறன்	சிங்களம் தமிழ் ஆங்கிலம்	1 மணித்தியாலம்	100	40

குறிப்பு

பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்காக பரீட்சார்த்தியின் குத்தியையும் ஆற்றலையும் பரீட்சிதும் பார்த்தல்/அளந்தறிதல் இந்த எழுத்துப் பரீட்சையின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% மாவது பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாடத்திட்டம்

பாட இலக்கம்	பாடம்	பாடத்திட்டம்
01	பொது உளச்சார்பு	பகுப்பாய்வுத் திறன், சொற் தர்க்க அறிவு, அறிமுறைசார் பரீட்சை, எளிரீதியான தர்க்க அறிவு, பொற்புறைசார் பரீட்சை, காரணகாரிய தர்க்க அறிவு (பல்தேர்வு வினா மற்றும் சுருக்க வினாவிடை.)
02	கிரகித்தல் திறன்	ஒரு பந்தியை வாசித்து கருக்க விடயவர்த்தகம், பந்தியொன்றின் அல்லது கூறிறொன்றின் இடைவெளிகளை நிரப்புதல், மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல், பொழிப்புரை செம்தல், நீண்ட வாக்கியமொன்றை சுருக்கமான வாக்கியத்தில் அமைத்தல், தன்னிலை பரீட்சை, சந்தர்ப்பத்திற்கேற்ற முடிவு குறித்த ஆய்வு, சிறுகுறிப்பு எழுத்துக்கள், சுருக்கம்.
03	எண் சார்ந்த திறன்	எண் ரீதியான திறன், அடிப்படை கணித மற்றும் எண் ரீதியான திறனைப் பரீட்சிப்பதுகான பல்தேர்வு வினா மற்றும் சுருக்க வினாவிடை.

நேர்முகப் பரீட்சை

வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பரீட்சித்தல் மற்றும் பதவிக்கான பொருத்தமான தன்மையை மேலும் அளந்தறிவதுகாக இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சையில் சித்தியடைந்தாலும் நியமனம் பெறுதல் கொள்ளத் தகுதி பெறமாட்டார் எனப்து கண்டிப்பாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேர்முகப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். அதன்போது குறித்த பரீட்சார்த்தியின் ஆளுமை மற்றும் ஏனைய பண்புகள் மதிப்பீடு செய்யப்படும். மக்கள் வங்கியின் தற்றுணியின் பிரகாரம் எழுத்து மூல போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட உயர் புள்ளிகளின் வரிசைக்கிரமப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இருமடங்கு பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

பரீட்சை நிபந்தனைகள்

I. எழுத்து போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும். பரீட்சார்த்தி தான் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்று முடியும். இந்த எழுத்துப் பரீட்சையில் அனைத்து வினாத் தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தை மாற்றவதற்கு அனுமதிவழங்கப்படமாட்டாது. அனைத்து பரீட்சார்த்திகளும் மூன்று விளாத்தாக்களுக்கும் தோற்ற வேண்டியது அத்தியாவியமாகும்.

II. இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்ப வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியில் அனுப்பிய மென்பிரதி (Soft Copy) மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பிய அச்சுப் பிரதி (Printed Copy) ஆகிய இரண்டும் பரீட்சைகள் திணைக்களத்திற்குக் கிடைத்தன் பின்னர் மென்பிரதியும் அச்சுப் பிரதியும் பொய்யுறுதிப்படுத்தப்படுவதோடு (Verify), சேவையுடைய விண்ணப்பங்கள் என திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டத்/ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனப்து முறைமையில் (System) பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதுகாகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் பத்திரத்தை (Common Instructions Sheet) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற எந்தத் திருத்தமும் சேல்லுபடியான திருத்தமாகக் கருதப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

III. பரீட்சைக் கட்டணம் ரூபா 500/- ஆகும். பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது இணையவழி முறைமையிலிருந்து வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் செயல்முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Cards)
ii. எந்தவொரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Cards)
iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறைமை (Bank of Ceylon Online Banking Method)
iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)
v. தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலம் (Postal Department payment at any Post Office)

குறிப்பு

மேற் குறிப்பிட்ட முறைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய முறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் (Technical Instructions) கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

IV. கொடுப்பனவு கிடைத்தது என்பது குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்காக முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற் குறிப்பிட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துமம்போது ஏற்படுகின்ற பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

V. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எந்தக் காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ/வேறுபரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

VI. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அழைப்பிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர்/ஒப்பமுவிறற ஒத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்கத்தின் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர் அல்லது பொதுத் விறாறவரின் விறாறாதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது ஏனைய மத வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான அல்லது மத குருமாரில் குறிப்பிடத் தகுந்த அந்தஸ்தில் உள்ள ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்தக் கொள்ள வேண்டும்.

குறிப்பு

பரீட்சை அனுமதிப் பத்திரம் இல்லாமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தன்று தனது கையொப்பத்தைத் சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தை மாத்திரம் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

VII. உரிய குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களை அனுப்பாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவத்திற்கு மேல் அனுப்புதலாகாது. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளுவதற்கு என கருதுதலாகாது.

VIII. பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க முழுவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவங்களுக்கள் உள்ள, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி திகதிற்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பங்களை சரியாக இணையவழியில் அனுப்பி விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்காக விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அது குறித்த அறிவித்தல் பத்திரிகைகள் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்தன் பின்னரும் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்தி இருந்தால் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் (Institutional Examination Organization Branch) விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வதிபவராக இருந்தால், மேற்குறிப்பிட்ட விபரங்களுடன் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கம் [Fax Number] குறிப்பிடப்பட்ட கோரிக்கை கடிதமொன்றை அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைகள் திணைக்களம் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம்பிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத் தபாலில் அனுப்புமாறு பதிவு செய்த பற்றுச்சீட்டைத் தயாராக வைத்துவிட்டுக்கொள்ளுவது பயனுள்ளதாக அமையும்.

IX. நிர்ப்பய வெளிப்படுத்தல்கள் எனப்படுவதைப் தீர்மானித்தல், ஆட்சேர்ப்பை ஒத்தி வைத்தல் அல்லது இரத்துச் செய்தல் மற்றும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு எந்தவொரு விடயம் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் மக்கள் வங்கி வசமிருக்கும்.

X. பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் என்பவை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விநிக்கப்படுகின்ற சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்தியின் இணங்க உட்படுகிறார்கள். அந்தச் சட்டங்கள் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விநிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர்கள் உட்பட வேண்டியிருக்கும்.

XI. பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்திப்படும் வகையில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் பத்திரங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரண்டு காதுகளையும் மூடாத வகையில் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை அடையாளம் காணும் வகையில் முகத்தையும் இரண்டு காதுகளையும் மூடாமல் இருக்க வேண்டும்.

XII. பெறுபேறுகளை வெளியீட்டல்

எழுத்துமூல தேர்வின் ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்து அவர்களின் அந்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் மொத்தத்திற்கு அமைவாக திறன் வரிசைக்கிரமத்தில் நிர்ப்பந்தித்து எதிர்பார்த்தளவான எண்ணிக்கைக்கு சமமாக பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பெறுபற்று ஆவணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வங்கிக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொரு விண்ணப்பதாருக்கும் பெறுபேறுகளைத் தனியட்சி முறையில் அறிவிக்கவோ அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடவோ பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

XIII. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்படும் அறிவித்தலில் மொழிப் பதங்களுக்கு இடையில் ஏதேனும் மாறுபாடு அல்லது முன்பின் முரணாக இருப்பதாகக் தெரிவந்தால் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைவாக செயலாற்றப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர் (மனித வளங்கள்)
மக்கள் வங்கி, தலைமை காரியாலயம்,
இலக்கம். 75, சேர் சீற்றம்பலம் ஏ. காடினர் மாவத்த
கொழும்பு - 02.

PEOPLE'S BANK
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
AA+ (lka) Fitch Rating, AAA– Brand Finance Rating
The Bank of the People
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.